www.padippakam.com

# புதிய தடம்

6
1999



TASNA. No. 213/01/99

தனிச்சுற்று இதழ் நன்கொடை ரூ

படிப்பகம்

www.padippakam.com

புதிய தடமும், புனரும் இணைந்து இராமேசுவரத்தில் கடந்த 31–7–99 ம் தேதியில் முதல் முயற்சியாக திரை விமர்சன அரங்கொன்றிற்கு ஏற்பாடு செய்து நடத்தியும் முடிக்கப்பட்டது.

தீவுக்குள் இருந்து வெளிவரும் சிற்றிதழ்கள் புதியதடம், பிரகடனம் இணைந்து நிகழ்ச்சியை நடத்தலாம் என்ற யோசனையை பிரகடனம் கவனிக்காமல் நிராகரித்ததைத் தொடர்ந்து " புனர் " இதழ் மனேஷ் –ன் மேலான ஒத்துழைப்போடு நிகழ்ச்சி நடந்தேறியது.

திரைவிமர்சன அரங்க ஏற்பாட்டை, முழு மனதுடன் வரவேற்று உற்சாகப்படுத்தியும், நிகழ்ச்சிக்கு இடம் மற்றும் பிற உதவிகள் வழங்கியதுடன், நிகழ்வில் பங்கேற்று கருத்துரையும் வழங்கிய நண்பர் திரு. கோடூர் விஜயகுமார் அவர்கள் பாராட்டுக்குரியவர்.

விமர்சன அரங்கிற்கு 40 அழைப்பிதழ்கள் வழங்கப்பட்டது. 20 நண்பர்கள் கலந்து கொண்டனர். வாழ்த்துரை வழங்கிய திரு. முருகானந்தம் (CPI) தீவிற்குள் ஒரு புதிய முயற்சி என்றும் மேலும் இது போன்ற அரங்கங்கள் வளர்ந்து செல்லவும் வாழ்த்தியதுடன் தானும் தன் பங்களிப்பை வழங்குவதாகவும் உறுதியளித்தார். தொடர்ந்து விஜயகுமார், சங்கமம் ஆசிரியர் மீராஷா ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

துவக்க உரையாற்றிய குமரன்தாஸ் ( பகிர்வு ஆசிரியர்) காட்சிப்படுத்துதல்களின் முக்கியத்துவம் பற்றிக்கூறி இன்றைய காட்சிப்படுத்தல்களின் பின்னே ஒளிந்திருக்கும் நலன்களை நாம் கண்டு கொள்ள பயிற்றுவிக்கும் முகமாகவே இச்சினிமா விமர்சன கருத்தரங்கு செயலாற்றவேண்டும் என்றார்.

பின்பு " அந்தப்புரம் " திரைப்படம் சின்னத்திரையில் ஒளிபரப்பட்டது. இறுதியில் பங்கேற்றவர்களது சிறு அளவிலான கலந்துரையாடல் நடந்தது.

இதுபோன்ற நிகழ்வு இப்பகுதியில் புதுமையே என்ற ...ரிய / ...்ரிவான அளவில் விவாதமோ கருத்துரைப்புகளோ ...ில்லை எனினும், பல்வேறு தடைகள் மற்றும் திட்டமிட்ட ...ளையும் மீறிய ஓர் துவக்கம் என்ற வகையில் நிகழ்ச்சி

*— கலியுகன்.*

படிப்பகம்

www.padippakam.com

## தொடரும் துயரங்களும் — கையாலாகாத அரசுகளும்

சமீபத்தில் ஒரிசாவைத் தாக்கிய கடும் புயலின் விளைவாக இதுவரை 10,000 த்திற்கும் மேற்பட்டவர்கள் மரணமடைந்திருக்கிறார்கள். பல இலட்சம் பேர் வீடுகளையும் 23 இலட்சம் எக்டேர் விவசாயநிலம் 15 இலட்சம் எக்டேர் பரப்புக்கு பயிர்கள் அழிந்து, எதிர்காலத்தையும் இழந்திருக்கிறார்கள். தொடரும் பசி, பட்டினித்துயரம், தொற்றுநோய்கள் வாழத்தகுதியற்ற சூழல் இவற்றின் காரணமாக பலிகள் தொடர்கின்றன.

ஏன் இத்தனை பேரழிவுகள் ? இதனை நாம் தவிர்த்திருக்க முடியாதா ?

முடியும். ஆனால் மக்களின் நலனில் எதிர்காலத்தில் அக்கறையுள்ள அரசுகளல்லவே இவை ! அண்மையில் அமெரிக்காவில் கலிபோர்னியா மாகாணத்தில் இத்தகைய பெரும் புயல் நிகழப்போவதை அவர்களின் தொழில் நுட்பப் பிரயோகங்களின் விளைவாக முன் கூட்டியே அறிந்து புயல் நிகழப்போகும் இடத்தில் வசிக்கும் அனைவரையும் பிற மாற்று இடங்களுக்கு குடியமர்த்தினார்கள். பிறகு புயல் ஓய்ந்த பின்னர் எல்லோரையும் பழைய இடத்திற்கு திரும்பி வரச் செய்தனர். நாம் இதைக் குறிப்பிடுவது ஏகாதியபத்தியத்தின் மீதும் அதன் தொழில் நுட்ப வளர்ச்சியின் மீதுள்ள பிரமைகளின் காரணமாக அல்ல. அமெரிக்காவில் நிலவுவது மக்களுக்கான அரசு என்பதும் எமது கருத்து அல்ல. புயல், பூகம்பம் போன்ற இயற்கைப் பேரழிவுகள் நிகழவிருப்பதை முன் கூட்டியே அறியக்கூடிய தொழில் நுட்பங்கள் அறிவியல் கண்டுபிடிப்புகளை அறிவிய உலகம் கண்டுபிடித்த பின்னரும் கூட இன்னும் ஆயிரம் ஆயிரம் உயிர்களை ஒரு பொருட்டாக மதிக்காமல் பலியிடக்கூடிய நிலவுடமை தரகு அதிகார வர்க்க ஆளுகையின் கோர முகத்தை நாம் இங்கே கிழித்துக் காண்பிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இந்திய பாரம்பரிய நிலவுடமை, தரகுச் சுரண்டல் முறைக்கு சேவகம் செய்து இலட்சங்களும், கோடிகளும் பண்ணுகிற மாமாக்களின் உடம்பில் ஒரு கீறல் விழுந்தால் கூட கெட்ட கனவு கண்டவன் கூட துள்ளியெழுந்து பார்க்கிறஇந்தஅரசுகள் பத்தாயிரத்திற்கும் மேற்பட்டவரை பலி கொண்ட ஒரு விபத்தின் பின்னால் இறந்து போனது ஆயிரம் பேர் என்றும் இரண்டாயிரம் பேர் என்றும் சாயம் பூசுவது எதற்கு ? மக்களுக்கான அரசு இருப்பதாக் கூறிக்கொண்டே மறுபுரத்தில் மக்களுக்கு விரோதமான செயற்பாடுகளை முழு மூச்சாக முன்னெடுத்துச் செல்லும் இந்திய நிலவுடமைத் தரகு ஆதிக்க வர்க்கமே இத்தனை பலிகளுக்கும் பொறுப்பாளி.



படிப்பகம்

www.padippakam.com

புதிய தடம் துவங்கி கடந்த ஐந்தாவது இதழுடன் ஒரு ஆண்டு நிறைவு பெறுகிறது.

கருத்து சுதந்திரம் முற்றாக மறுக்கப்பட்ட ஒரு சமூகத்தில், அத்தகைய கருத்து சுதந்திரத்தின் தேவைக்காக குரலெழுப்பும் ஒரு முயற்சி என்று சொல்லிக்கொண்டு துவங்கப்படும் பத்திரிகைகள், அந்த நோக்கத்திற்கே எதிராகச் செயல்படுகிறது. ஆகவே நிகழ்வுப் போக்கில் கருத்து சுதந்திரம் எனும் ஜனநாயக அம்சத்தின் தேவையை முன்னிட்டு அதற்கான முயற்சியில் " புதிய தடம் " துவக்கப்பட்டது.

சமூக, கலாச்சார, பொருளாதார அம்சங்கள் பற்றிய நடைமுறைகள் குறித்து புதிய தடம் இதுவரை பல கருத்துக்களை வெளியிட்டிருக்கிறது. அது பற்றி வாசகர்களிடமிருந்து பெறப்பட்ட விமர்சனங்களும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

மாற்றுக் கருத்துக் கொண்டிருப்பவர்கள் தொடர்ந்து எழுதாததன் காரணமாகவும், விமர்சனங்களை நேர்மையுடன் எதிர் கொள்ளத் தயாராக இல்லாதவர்களின் போக்குகளினாலும் பல கட்டுரைகள் தொடராமல் விவாதங்களாக நிற்கின்றன. எனினும் கூட பல்வேறு தோழர்களின் ஆர்வமான வாசிப்பும், பங்களிப்பும் இதழ் தொடர்ந்து வெளிவர வேண்டிய தேவையை உணர்த்துகின்றன.

பத்திரிக்கையும் நின்றுவிடாது இன்னும் பல கலாச்சார, இலக்கிய செயல்பாடுகளை மேற்கொள்ள " புதிய தடம் " ஆர்வமுடன் இருக்கிறது. அத்தகைய ஒரு அம்சமாகவே 31-7-99-ல் ஒரு திரைவிமர்சன அரங்கு முயற்சியை நிகழ்த்தினோம். ஆடு நனைகிறதென்று ஓனாய் நீலிக் கண்ணீர் விடும் இன்றைய அரசியல் சூழலில், முற்போக்கு இலக்கியம் எனும் பெயரில் நிகழ்ந்து வரும் பிற்போக்குப் பித்தலாட்டங்களுக்கு மத்தியில் அதற்கு எதிராக ஒரு சரியான, ஆரோக்கியமான, ஜனநாயகப் பூர்வமான கலை, இலக்கிய முயற்சிகளை முன்னெடுத்துச் செல்லும் நிறுவனமாக புதிய தடமும், சமூக விஞ்ஞானப் பயிலகமும் செயல்பட ஆர்வம் கொண்டிருக்கின்றன.

*உங்கள் கரங்களையும் கோர்த்துக்கொண்டு . . . . !*

*வரும் நாட்களில் . . . . !!*

தோழமையுடன்,

**" புதிய தடம் "**

—— சமூக விஞ்ஞானப் பயிலகம்.



படிப்பகம்

## ஷங்கரின் "முதல்வன்" [illegible] சில கருத்துக்கள் :

www.padippakam.com

திரைப்படங்கள் பற்றி நாம் வீணாகப் பேசிக் கொண்டிருக்க வேண்டியதில்லை என்று தோழர்கள் சிலர் கூறுகிறார்கள். இவ்வாறு அவர்கள் சொல்வதற்கு காரணம் இல்லாமல் இல்லை. அவர்களைப் பொறுத்தவரை சாதாரண மககள் சம்பந்தப்பட்டது சினிமா. இவர்களைப் போன்ற "தத்துவ வாதிகளுக்கு" சினிமா பற்றி பேசுவது எல்லாம் வெட்டி வேலைதான். நாம் அப்படி நினைக்க முடியாது. பெரிய தத்துவ வாதிகள் செய்ய முடியாத விசயங்களை எல்லாம் "காட்சிப்படுத்தல்" (சினிமா / டி.வி) மூலமாக இன்று செய்து கொண்டிருக்கிறார்கள் ஆளுவோர்.

இன்று மதவாத சக்திகள் ஆட்சிக்கட்டில் ஏறியுள்ளதை கடந்த ஆண்டுகளில் T.V. யில் ராமாயணம், மகாபாரதம், ஜெய் ஹனுமான், ஓம் நமச்சிவாயா என்ற தொடர்கள் ஒலி / ஒளி பரப்பப்பட்டதுடன் இணைத்துக் காணலாம். மற்றொன்று. காட்சிகள் ஒன்றும் பாதிப்பு ஏற்படுத்தாது என்றால் Close-Up க்கும், Pepsi-க்கும் T.V. யில் கோடி கோடியாக செலவு செய்து விளம்பரம் செய்கிறார்களே அந்தப்பணக்காரர்கள் என்ன முட்டாள்களா ?

படிப்பறிவு குறைந்த நமது நாட்டில் இது போன்ற "காட்சிப் படுத்தல்கள்" அதிக தாக்கத்தினை ஏற்படுத்துகிறது. இந்த தாக்கம் பற்றி நாம் நிறையப் பேச முடியும். அதற்கு இது இடமல்ல.

"முதல்வன்" — இன்றைய சினிமாக்கள் காதல் பற்றி மட்டும் பேசும் போது அரசியல் பிரச்சனைகளை காதல் கலந்து ஷங்கர் கொடுத்துள்ளார். நாமும் கொஞ்சம் யோசிக்க வேண்டியுள்ளது.

மற்றவர்கள் போல் இல்லாமல் ஷங்கர், மணிரத்னம், சேரன் போன்றோர் இன்றைய பற்றி எரியும் பிரச்சனை பற்றியும் பேசுகிறார்களே ! இது வரவேற்கத் தகுந்ததுதானே ? அரசியல் கட்சிகள் அரசியலில் இருந்து மக்களை அந்நியப்படுத்திக்கொண்டிருக்கும்போது சினிமாக்காரர்கள் அரசியலை மக்கள் முன் கொண்டு வருகிறார்களே !

அப்படி எல்லாம் மகிழ்ந்து விட முடியாது. ஒரு பிரிவு சினிமாக்காரர்கள் காதல் போதையூட்டி நம்மைக் கற்பனையில் மிதக்க வைக்கிறார்கள் என்றால், மறு பிரிவு "முற்போக்கு" மண்டை வீங்கி இயக்குனர்களான பாலச்சந்தர், பாரதிராஜா, மணிரத்னம், சேரன், ஷங்கர் போன்றோர் நமது அன்றாட வாழ்க்கைப் பிரச்சனைகளைப்பற்றியெல்லாம் படம் பிடித்துக் காட்டி தீர்வு என்று போகாத ஊருக்கு வழி காட்டுகிறார்கள்.

இவர்களது கிறுக்குத் தனமான குறுக்கு வழிகள் படம் பார்ப்பவரைப் பாதிக்காது என்று சொல்வதற்கில்லை. அவ்வாறு பாதிக்கும் கிறுக்குத்தனம்தான் ஷங்கரின் "முதல்வன்."

இன்றைக்கு சமுக அக்கரையின்றி தன் நலனில் ஊறிப்போய் ஓட்டுப் போடுவதைக் கூட சுமையாகக் கருதிக் கொண்டு "அரசியல் என்பது சாக்கடை" என்று புதிய அரசியல் பேசிக் கொண்டிருக்கும் நடுத்தர வர்க்க அறிவு ஜீவிகளை முதல்வர் பதவிக்கு அழைக்கிறார் ஷங்கர்.



படிப்பகம்

www.padippakam.com

## சற்றே ஜாக்கிரதையாய் . . . .

சற்றே ஜாக்கிரதையாய் . . ..
இருங்கள் உங்களுக்கு
சமூக உணர்வு இருந்தால் . . .

இங்கே
பொது நல உயிரை விற்று
சுய நல பிணங்கள்
பல வாழ்கின்றன. எனவே
சற்றே ஜாக்கிரதையாய் . . .

கீழ வெண்மணி சொக்கப்பனையை
தியாக மலர்களாக்கி
பல இரங்கல் கூட்டங்கள்

'லீலாவதி' களை பலிகொடுத்து
சில பாராளுமன்ற
இருக்கைகள்.

மூலிகை இராமரின்
வயிற்றெரிச்சலில்
'பொக்ரான்' அணுகுண்டு

மார்க்சியத்தை அடகு வைத்து
சமூக மாற்றம் !

பகத் சிங்கின் தூக்குக்கயிற்றில்
கொடியேற்றி
வந்தே மாதரம்.

ஊழல் பேய்களின்
'சுதந்திரத்திற்கு'
விடிய விடிய கலை இலக்கிய இரவு.

இன்னும் பலவாய்
ஒன்றன் பின் ஒன்றாய்
ஒன்றை மிஞ்சும் இன்னொன்றின்
அசிங்கமாய் . . அவலமாய்
எனவே
சற்றே ஜாக்கிரதையாய் . . . இருங்கள்
உங்களுக்கு சமூக உணர்வு
இருந்தால்.

*ரோஜா சந்திரன்*



படிப்பகம்

## முற்போக்காளர்களின் முற்போக்குகள்

www.padippakam.com

மின்சார துறையை
அரசு யாருக்கும்
விற்கட்டும்
எங்கள் மின்கம்பங்களில்
விளக்குகள்
எரிந்தால் போதும்

உழைப்பாளிகள் எல்லாம்
வீதிகளில் கிடக்கட்டும்
நாங்கள் மேதின விழா
எடுத்தால் போதும்.

போராட்டக்காரனை
யாரும்
வேட்டையாடட்டும்
அவன் பெயரில்
கலைக்குழு இருந்தால் போதும்.

வறுமையால்
மக்கள் தற்கொலை செய்துகொள்ளட்டும்
ஆனால்
அவர்களை எரிக்கும்
சுடுகாட்டில் கொட்டகைகள்
இருந்தால் போதும்.

வாக்களித்தவர்களின்
வாழ்வுரிமை ஒழியட்டும்
எவன் காலை நக்கியாவது
எங்களுக்கு
2 சீட்டுகள்
கிடைத்தால் போதும்.

— *S.T. ராஜா*

## *வாசிக்கக்கிடைத்த கவிதை. 1. சாதீ*

நந்தனை எரித்து
மதுரை நகரத்தை எரித்து
வெண்மணி வழியாய்
எல்லா வீட்டையும் எரித்தது சா ‘ தீ’

சாதி வெறிப் பசிக்கு



படிப்பகம்

இமானுவேலின் தலை... இன்றும்
குருங்குளம் குருமூர்த்தியின் கட்டைவிரல்...

www.padippakam.com

யூதர்களுக்கு ஹிட்லரின்
சித்திரவதை முகாம்கள்...
தலித் பெண்களென்பதால்
சிதம்பரம் பத்மினிக்கும்
அத்தியூர் விசயாவுக்கும்
காவல் நிலையங்கள்...

கூலிக்காக வெண்மணி
உரிமைக்காக உஞ்சனை
போடி... கொடியன்குளம்...

நீ... இப்படியே இருந்தால்
பட்டியல் இன்னும் இழிவாய் நீளும்...
பாட்டாளியை உழைப்பிலிருந்து
அன்னியப்படுத்தியது முதலாளியம்...
தலித்தை உரிமையிலிருந்து
அன்னியப்படுத்தியது பார்ப்பனீயம்...
பள்ளிக்கு
தனத்தால் தீட்டு...
பாராளுமன்றத்திற்கு
அம்பேத்கரால்...
ஏடறிந்த காலம் முதல்
மறுக்கப்பட்ட நமது மானுடம்
திருப்பி அடிக்காமல்
திரும்பக் கிடைக்காது.

*தய். கந்தசாமி,* திருத்துரைப்பூண்டி,
(இருள்வெளி [பிரான்ஸ்] தொகுப்பிலிருந்து)

<u>வாசிக்கக்கிடைத்த கவிதை – (2)</u>

விதிப்பயனால்
வழிவேறு இல்லாமலே
இந்தப் பிழைப்பு என்றாள் விபச்சாரி

வயிற்றுப் பசியால்
வழிவேறு இல்லாமலே
இந்தக் களவு என்றான் திருடன்



படிப்பகம்

www.padippakam.com

தேச நலனுக்காய்
வழிவேறு இல்லாமலே
இந்தப்போர் என்றது அரசு

விபச்சாரியின் மொழியிலும் திருடனின் மொழியிலும்
தொனித்த துயரம்
அரசின் மொழியில் ஏன் தொனிக்கவில்லை.

— சி. சிவசேகரம்.

## வாசிக்கக்கிடைத்த கவிதை. (3) மரங்களை வெட்டாதீர்.

மரங்களை வெட்டாதீர்கள் என்று
நான் சொல்ல மாட்டேன்
அவைகளுக்கு உயிருண்டு
என்ற போதிலும் —

ஓலைகளைப் பறிக்காதீர்கள் என்று
நான் சொல்ல மாட்டேன்
இயற்கைக்கு
அவை எழில் சேர்த்த போதிலும்

கிளைகளை உடைக்காதீர்கள் என்று
நான் சொல்ல மாட்டேன்
கிளைகள்
மரங்களின் கரங்கள் என்றாலும்

ஏனென்றால்
எனக்கு
ஒரு குடிசை வேண்டும்.

— சேரபண்டராஜு

## விவாதம் :

### காதல் என்பது கற்பிதமே

— பாட்டாளி

என் நாட்களில் காதல் என்ற அனுபவமே வாய்க்காதவன் நான். ஆனால் பல்வேறு காதலிக்கும் நண்பர்களுக்கு எழுதிக் கொடுத்துள்ளேன். கவிதைகள் கூட எழுதிக்கொடுத்தாக ஞாபகம். எல்லாம் அடிநாளைக் கிளறும்போது சில விசயங்கள் பளிச்சென.


படிப்பகம்

www.padippakam.com

இந்தப் [illegible]கள்தான் இணைக்கப்பட்டு, சேர்க்கப்பட்டு காதல் என்ற உணர்வின் மீது ஏற்றப்பட்டு இன்று நம்முன் இருக்கிற 'காதல்' என்று உலாவுகிறது.

மேற்குறித்தவைகளிலிருந்து ஒரு முடிவுக்கு வந்திருக்க முடியும். காதல் என்பது பாலுணர்வு சம்பந்தப்பட்டது மட்டும் அல்ல. அடுத்து நான் ஏற்கனவே சொன்னது மாதிரி தெருவில் பேப்பர் பொறுக்கும் தொழிலைச் செய்யும் பெண் மேல் எந்தக் காளை காதல் கொள்வான் ? இதன் மூலம் சமூக இருப்பு நிலை, வர்க்கம் பொருளியற் வேறுபாடுகள் என பல்வேறு கூறுகளின் அடிப்படை வாய்ந்தது. ஆக எல்லாக் கோணங்களிலும் காதல் என்ற கருத்து கற்பிதங்களே தவிர அதிலும் அதீதமான மிகைப்படுத்தப்பட்ட கற்பிதங்கள் தான் என்பது என் முடிவு.

## காதல் என்பது எதுவரை

— சுபசித்திரன்

' காதல் என்பது எதுவரை . . . ?

கல்யாணகாலம் வரும் வரை . . .

திரைப்படப்பாடல் ஒலிக்கிறது. அது என்ன காதல் என்பது திருமணத்தின் வரை ? அதன் பிறகு அவர்கள் காதல் என்னவாகும் ? ஆனால் வெளிவரும் தமிழ் ( ஏன் ? இந்திய ) திரைப்படங்களில் 99% படங்களில் காதல் ஜோடி திருமணம் செய்வதுடன் முடிந்து விடுகிறது. கதாநாயகனோ அல்லது நாயகியோ அல்லது இருவருமோ தாம் விரும்பும் ஒருவருடன் இணையும் வரை ஏற்படும் சம்பவங்கள் மட்டுமே திரைப்படம் முழுவதும் நகைச்சுவையாகவோ, சீரியஸாகவோ, சண்டைக் காட்சிகளுடனோ, சில படங்களில் சாதி மத ஒற்றுமையைப் போதித்தோ சொல்லப்படுகிறது. தொடர்ந்து பல பரிமாணங்களின் மூலம் மூளையில் தொடர்ந்து செலுத்தப்படும் இந்தக் காதல் முயற்சி இளைஞர்கள் சிறுவர்கள் முதல் அனைவரையும் பாதித்து அவர்களது ஒவ்வொரு செயலையும் தீர்மானிக்கக்கூடிய அளவுக்குச் சென்றுள்ளது. இத்தகைய காதல் திரைப்படங்கள் ' நமது நாட்டின் புனிதமான ' கருத்துக்களை கோட்பாடுகளை நிலைநிறுத்துவதில் இன்று பிரதான பங்கு வகிக்கின்றன.

வளர்ந்த நிலையிலுள்ள, அதே சமயத்தில் அனைத்துத் தரப்பு மக்களையும் சென்றடையும் சாதனமாக இருப்பதால், திரைப்படத்தில் இது சாத்தியமாகிறது.

திரைப்படங்கள் மனித வாழ்வில் நடந்த, நடக்கும் நிகழ்ச்சிகளை எப்படி நடத்தப்பட வேண்டும் ? என்ற நோக்கில் விஞ்ஞான உதவியுடன் கலையாகத் தருகிறது.

ஆனால் மக்கள் பல பிரிவுகளாக, பொருளாதார நிலையில் பல தட்டுகளாக உள்ள சமூகத்தில் ஒரு தட்டின் கருத்துக்களை பிற தட்டு மக்கள் மீது திணிக்க திரைப்பட சாதனம் இன்று



படிப்பகம்

www.padippakam.com
பயன்பட்டுக்கொண்டிருக்கிறது. திணிக்கப்படும் கருத்துக்களை மக்கள் ஏற்றுக் கொள்ள இந்தக் ' காதல் ' போதை கலந்து கொடுக்கப்படுகிறது. வரலாற்றில் இது ஒன்றும் புதியதல்ல. திரைப்படங்களுக்கு முன்பிருந்த கலை வடிவங்களான நாடகம் இலக்கியம் போன்ற (உழைப்பின் உப விளைவுகளான ) கலைகளிலும் இத்தகைய கருத்துத்திணிப்புகள் நடந்துள்ளது.

ஒவ்வொருகாலத்திலும் திணிக்கப்படும் கருத்துகளை அங்கீகரிக்க வைக்கப் பயன்படும் பொருள் மாறுபட்டுள்ளது. விக்கிரமாதித்தன் கதையில் – மாயாஜாலம் மற்றும் தந்திரம், அரிச்சந்திரன் கதையில் குடும்பப் பிரிவு மற்றும் வறுமை, வள்ளி திருமணத்தில் – கடவுள் வேடவர் குலப் பெண்ணை மணத்தல், மதுரைவீரன் மற்றும் ஆரியமாலா (காத்தவராயன்) கதைகளில் உயர் குலம் தாழ்த்தப்பட்ட குலம் இணைவு, ரத்தக்கண்ணீர் – ஆணவத்திற்குத் தண்டனை, பாஞ்சாலி சபதம் – அவமானத்திற்குப் பழி வாங்குதல், இன்றைய திரைப்படங்களில் எப்படியும் வாழலாம் ! என்று கூறலாம். ஆனால் இவை அனைத்துடன் கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ இணைந்து காணப்படுவது பாலினக் கவர்ச்சி அல்லது காதல் என்பதாகும்.

இந்தக்காதல் அனைத்துத் தட்டு மக்களையும் கவர்வதின் காரணம் என்ன ? காதல் என்பது மனிதன் தோன்றியது முதல் உள்ளதா ? மனிதனின் வரலாற்றில் காதல் என்ற ஒன்று இல்லாத காலமே இல்லையா ?

இருந்தது. காதல் இல்லாத காலத்தில் தனிமனிதன் தனக்கென்று எந்தப்பொருளும் இல்லாமல் குழுக்களாக வாழ்ந்து வந்தான். வேட்டையாடுதல் அவனது பிரதானத் தொழில். கால்நடை வளர்ப்பு உப தொழில். மற்ற குழுக்களின் கால்நடைகளை கொள்ளையடித்தலும் ( ஆ நிறை கவர்தல்) அதனை ஒட்டி குழுக்களிடையே போரிடலும் நடந்தன. இங்கு கால்நடைகள் குழுக்களுக்கு பொதுவானவையாக இருந்தது. எந்த ஒரு தனி மனிதனது சொத்துடைமையாகவும் இருக்கவில்லை. இதன் பிறகு விவசாய உற்பத்தியில் ஏற்பட்ட வளர்ச்சியில் நிலங்களும் கால்நடைகளும் குழு உறுப்பினர்களுக்கு – தனி மனிதனுக்கு – பிரித்துக் கொடுக்கப்பட்டது. இதில் ' தனக்கு ' வழங்கப்பட்ட நிலம் கால்நடைகள் (சொத்துகள்) ' பிறர்க்கு ' சென்றுவிடக் கூடாது என்பதற்காக தனக்குப் பிறகு தனது வாரிசுக்கே தன் சொத்து போய் சேரவேண்டும் என்பதற்காக திருமணம், மனைவியின் கற்பு வரையறுக்கப்பட்டது. அதற்கு முன்பு வரை ' பொதுமணமுறை ' (குழு மணமுறை, இணை மணமுறை) மட்டுமே இருந்தது. தனிப்பட்ட குடும்பம் இருக்கவில்லை. குழு முழுமையும் ஒரு குடும்பமாக இருந்தது.

இவ்வாறு அதற்கு முன்பிருந்ததைவிட குறுக்கப்பட்ட பாலியல் உறவு காரணமாக ( பெண்களிடமிருந்து சமூக தலைமை பறித்துக்கொண்ட ) ஆண், இறைவிழிபாட்டுடன் இணைத்து ( தாசிகள் ) பொதுமகளிர் முறையை ஏற்படுத்திக் கொண்டான். ஆனால் பெண்ணுக்கு இவ்வாறான முறைகள் தடுக்கப்பட்டன. மேலும் திருமணம் என்பதும் பெற்றோர் ஏற்பாடு செய்த மணமகன் அல்லது மணமகளையே திருமணம்


படிப்பகம்

செய்வதாக இருந்தது.

இவ்வாறு இதற்கு முந்தைய காலத்தில் இருந்த முறைக்குப்பதிலாக ஆண் – பெண் – ணின் பாலியல் உறவுகள் குறுக்கப்பட்டதால் மணஉறவுகளுக்கு வெளியே பாலியல் உறவு ஏற்படுவதை வரலாற்றில் தடைசெய்ய இயலவில்லை.

www.padippakam.com

குடும்பம் தோன்றியதன் உடன் நிகழ்வாக மறைமுக பாலியல் உறவுகள் ஏற்பட்டது. இந்த மோக ஆவேசம், அதற்கான காத்திருப்பு மற்றும் கிடைக்காதபோது ஏற்படும் வேதனை இவைகள் தான் காதலாகியது.

இதற்கு அடுத்த காலகட்டத்தில் கூட்டுக்குடும்ப முறை விவசாயத்தொழிலுக்குத் தேவையாக இருந்தது. அப்போது காதலென்பது (மோக ஆவேசமும் அதற்கான காத்திருப்பும்) திருமணத்தை ஆணையும் பெண்ணையும் அங்கீகரிக்கச்செய்யும் ஒன்றாக இலக்கியங்களால் உருமாற்றப்பட்டது.

காதலன் எவ்வாறு இருக்கவேண்டும் என்பதையும் காதலி எவ்வாறு இருக்கவேண்டும் என்பதையும் குடும்ப முறைக்கு ஏற்றவாறு இலக்கியங்கள் மாற்றி, கற்பு பற்றிய சிந்தனையைத் திணித்தன. (ராமன்–சீதை, நளன் – தமயந்தி, கோவலன் – கண்ணகி, சத்தியவான் – சாவித்திரி...) இவ்வாறு கற்பு நெறிக்கு எதிராகத் தோன்றிய காதல், பிற்கால கட்டத்தில் கற்புநெறியைப் போற்றும் குடும்ப முறைக்கு ஏற்றதாக மாற்றப்பட்டது.

குடும்ப முறைக்கு ஏற்றவாறு காதலன் வேறு பெண்களுடன் உறவு கொள்ள அனுமதியும் அதை ஏற்றுக் கொண்டு கணவனுக்குப் பணிவிடைகளைச் செய்யும் மனைவியாக காதலியையும் உருவாக்கியது.

இந்தக் காதலி தனது கணவன் வேறு பெண்களுடன் செல்வதைத் தடுக்க தனக்கு அவனைப் பிடிக்காமல் இருந்தாலும் கூட அவனுக்கு அடிமையாக இருந்து, அவனுக்கு தொண்டூழியம் செய்தும் அவனுக்கு குழந்தைகளைப் பெற்றும் அவனுக்கு அழகுப் 'பொருளாய்' காட்சி தர வேண்டும்.

விவசாய உற்பத்தி முறையில் சிறிது மாறுதல் ஏற்பட்டாலும் அதே சமூக உற்பத்தி உறவுகள் தொடர்ந்து நிலை பெற்றுள்ளதால் மேற்கூரிய கருத்துத் திணிப்புகள் இன்றுவரை நடைபெற்றுக்கொண்டுள்ளது. இதற்கு இன்றைய விஞ்ஞான கலைத் தொடர்பு சாதனமான திரைப்படங்களும் உதவுகிறது.

இன்றும் மேலிருந்து திணிக்கப்படும் கருத்தான 'அராஜகம்' திரைப்படங்களின் முலம் காதல் கலந்து கொடுக்கப்படுகிறது. இன்றைய திரைப்படக்காதலன் தான் விரும்பும் பெண் தன்னை விரும்ப வேண்டும் எனக் கட்டாயப்படுத்துகிறான். அப்பெண்ணை கேலி செய்தோ, கெஞ்சியோ, தற்கொலை செய்து கொள்ளப்போவதாக மிரட்டியோ அவளுக்கு ஆபத்தில் உதவியோ அல்லது தியாகம்! செய்தோ தனது காதலைத் திணிக்கிறான்.

அதேபோல் திரைப்படக் காதலியும் தான் விரும்பும் ஆண் மீது தன் காதலைத் திணிக்கிறாள். இங்கு மற்றவர்களின் கருத்துக்களுக்கு



படிப்பகம்

[illegible] அல்லது அப்படி ஒன்று இருக்கும் என்று நினைவூட்டப்படுவதோ www.padippakam.com [illegible] இயக்குனர்களால் செய்யப்படுவதில்லை.

காதலிக்கு அதாவது பெண்ணுக்கு எவ்வளவுதான் திறமை இருந்தாலும் அவள் ஆணுக்கு முன் பணிந்து அவனை வணங்கும் ' சாத்வீக குணம் உடையவளாக இருக்கவேண்டும் எனப் போதிக்கும் வேளையில் திரைப்படங்கள் சமூக அக்கறைக்குப் புறம்பாக ஒருவனை, மக்களுக்காகப் போரிடும் கதாநாயகனை ( அவன் வழி தனி வழி ) அவள் காதலித்து மணப்பதாக காட்டுகிறது.

இவ்வாறான காட்சிப் படுத்துதல் சமூகத்தில் குறிப்பாக பெண்களிடத்தில் ஒரு தலைவனை, ஒரு தேவதூதனை எதிர்பார்க்க வைத்து அவன் வரும்வரை முடக்கி விடுகிறது. எதார்த்தத்தில் அவ்வாறான தலைவன் இல்லாததால் திரைப்பட நாயக நடிகனையே தலைவனாக ஏற்பதும் நடைபெறுகிறது. ஆண்களை, தங்களது சமூகப் பிரச்சனைகளை தங்களது ' தலைவன்' பார்த்துக் கொள்வான் என மயக்கி சமூக அக்கறை அற்று எப்படியும் வாழலாம் என வழி காட்டுகிறது.

அதேநேரத்தில் தனது காதலியை திரைப்பட நாயகன் பாணியிலே கவர்வதாக எண்ணிக்கொண்டு நடை உடை அலங்காரம் செய்து கொண்டு திரைப்பட காட்சிகள் போலவே பெண்களை கேலி செய்யவும் கேவலப் படுத்தவும் செய்கிறான். பெண்களும் திரைப்பட நாயகியைப் போல உடைகள் அணிந்து அலங்காரப் பதுமைகளாக மாறி தனது நாயகனுக்காக காத்திருக்கின்றனர்.

திரைப்படக் காதலதல் பலியாகிப்போன தங்களது இயல்பான நடவடிக்கைகள் இன்றி போலியான பாவனைகளால் கவரப்பட்டு காதல் புரிந்தாலும் – அந்தப் போலியான பாவனைகள் குறையும் பொழுதோ அல்லது வாழ்க்கை நெருக்கடி காரணமாக தங்களது இயல்பான நடவடிக்கைகளைச் செய்யும் பொழுதோ இவர்களது புனிதமான ' தெய்வீகக் காதல்' சிதைந்து பிரிந்து விடுகிறார்கள்.

இவ்வாறான காதல்கள் அல்லது காதல் திருமண முடிவுகளை காட்டி பெற்றோர் நிச்சயிக்கும் திருமணமே (அது தரும் பாதுகாப்பையும், முக்கியமாக பொருளாதார நலனையும் முன் நிறுத்தி ) உயர்ந்ததாகக் கற்பிக்கப்படுகிறது. ஆனால் பெற்றோரால் நிச்சயிக்கப்பட்ட திருமணத் தம்பதிகளும் கூட திரைப்படக் காதலால் பாதிக்கப்பட்டவர்களே. அங்கேயும் கணவன் ( காதலன் ) இப்படித்தான் இருக்க வேண்டும் மனைவி ( காதலி ) இப்படித்தான் இருக்க வேண்டும் என திரைப்படக் காதலன் காதலியின் நகலாக நடை உடை மற்றும் அலங்காரத்தில் இருவருமே பாவனை செய்கின்றனர். மேலிருந்து திணிக்கப்படும் இந்தப் பாவனைக்கு மக்கள் தட்டில் பலரும் பலியாகியதை பயன்படுத்தி பன்னாட்டு நுகர்பண்ட வியாபாரப் பிசாசுகள் தங்களது வியாபாரத்தைப் பெருக்கிக் கொள்கின்றனர். அதற்குத் திரைப்படத்தை விடவும் நவீன மக்கள் தொடர்பு சாதனமான தொலைக்காட்சி பயன் படுத்தப்படுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

தொலைக்காட்சி விளம்பரங்களில் வரும் காதலர்கள் அவர்கள் பயன்படுத்தும் நுகர் பண்டங்களால் ஒருவரை ஒருவர் கவர்ந்து கொள்கின்றனர். உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் செயல்பாடுகளை விஞ்ஞான பூர்வமாக விளக்கிக்கூறி விளம்பரம் செய்வதற்கு பதிலாக எதிர்பாலினரை எளிதில் கவர்வதற்கு உதவுவதாக்காட்டி விளம்பரம் செய்யப்ப டுகிறது. விளம்பரத்தின்படி பார்த்தால் ‘ அட்லஸ் ’ சைக்கிள் ஒன்று வாங்கினால் உங்களுக்கு ஒரு காதலி நிச்சயம் கிடைப்பாள். ‘பாண்ட்ஸ்’ முகப்பவுடர் பயன்படுத்தினால் காதலன் கிடைப்பான். (வாழ்க காதல்)

இவ்வாறு தொடர்ந்து கருத்துத் திணிப்பிற்கும் பிரச்சாரத்திற்கும் பயன்பட்டு வந்த ‘ காதல் ’ சில ‘ இலட்சிய ’ திரைப்பட இயக்குனர்களால் சாதி மத நல்லிணக்க பிரச்சாரத்திற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது. சாதிய மற்றும் மதவாத மோதல்களைப் பற்றிய விஞ்ஞானப் பூர்வமாக ஆய்வோ, பார்வையோ இல்லாமல் காதல் மூலம் மட்டுமே அவற்றை தடுக்க இயலும் என்றே இறுதியில் கூறப்படுகிறது.

ஆனால் நடைமுறையில் பொருளாதாரத்திலும் சமூக ஆதிக்கத்திலும் ஏற்றத்தாழ்வான பலபடி நிலை சமூகமாக இந்தியா இருப்பதால் காதல் திருமணம் செய்து கொண்ட வேறு வேறு சாதியை அல்லது மதத்தைச் சேர்ந்தவர்கள் திருமணம் செய்து கொண்டாலும் எந்தச் சமூகப் படிநிலையில் எந்தச் சாதியில் அல்லது மதத்தில் அவர்களுக்கு இடம் கிடைக்கிறதோ அந்த சாதி அல்லது மதத்தில் இணைந்து வருகின்றனர்.
காதல் திருமணங்கள் சாதியையும் பிற ஏற்றத் தாழ்வுகளையும் போக்க முடியும் என்றால் அந்த காதலர் இருவரும் சாதீய வேறுபாடுகளையும் பிற ஏற்றத்தாழ்வுகளையும் எதிர்க்கக் கூடியவர்களாக எதிர்த்து தொடர்ந்து போராடுபவர்களாக இருக்க வேண்டும். அவ்வாறு சாதீய வேறுபாடுகளை களையப் போராடும் பொழுது அதற்குத் தயாராக உள்ள அல்லது ஏற்கனவே போராடிக் கொண்டிருக்கும் ஆண் மற்றும் பெண்களுடன் இணைந்து போராட்டம் நடைபெறும். இத்தகைய காதலர்களுக்கு சமூகமே அக்கறைக்குரியதாக இருக்குமே தவிர தங்களது குடும்பத்தைப் பற்றிய அக்கறை இருக்காது.

மேலும் சாதிய மற்றும் பிற ஆதிக்கத்திற்கு எதிராகப் போராடும் இந்தக் காதலர்களுக்கு தங்களில் ஒருவர் மேல் ஒருவர் ஆதிக்கம் செய்வதையும் இயல்பாகவே விரும்ப மாட்டார்கள். எனவே எவ்விதமான நிர்பந்தங்களையும் காதலின் பேரில் ஒருவர் மற்றவருக்குச் செய்ய இயலாது. பிரிவு ஏற்படும் பொழுது குழந்தை, குடும்பம் போன்றவற்றைக் காட்டி ஒருவர் மற்றஒருவர் மேல் தனது விருப்பத்தை நிர்பந்தம் செய்ய இயலாது.

அல்லது அந்த நிர்பந்தம் அங்கீகரிக்கப்படாது. அங்கு காதல் என்றால் அன்பும் ஆதரவும் கலந்த பாலினக் கவர்ச்சி மட்டுமே இருக்கும். இவ்வாறு குடும்ப முறையின் உடன் நிகழ்வாக அதற்கு எதிராகத் தோன்றிய காதல் என்பது எதுவரை இருக்கும் ?

திருமணக் குடும்ப முறையின் அழிவிற்குப் பிறகும் இருக்கும்.



படிப்பகம்

www.padippakam.com



புதிய தடம் கிடைத்தது. மகிழ்ச்சி. தலையங்கம், மருங்கன் கவிதைகள் நன்று. தோழர் குமரன் தாஸின் கட்டுரையும் சரியானது. காதல் – சில குறிப்புகள், விவாதம், நடத்துகிற அளவிற்கு தெளிவாய் கருத்துகள் வைக்கப்படவில்லை – வடிவமைப்பில், வழங்கியதில் மட்டுமல்ல, உள்ளடக்கத்திலும்.

அதனால்தான் இறுதியில் ஐரோப்பிய பண்பாட்டைச் சிந்திக்கச் செய்கிற பரிந்துரை பதிவாகியிருக்கிறது.

*— தீபன், ஆற்காடு.*

புதியதடம் 5–ன் தலையங்கம் (பயிலுவோம்– பயிற்றுவிப்போம்) மிக மிக அருமை. இத்தனை ஆழமும் தெளிவும் கொண்ட நீங்கள் எமது ' சிந்தனையாளன் ' போன்ற, கொஞ்நசம் அதிக எண்ணிக்கைச் சுற்றுள்ள பத்திரிக்கையில் எழுதினால் என்ன ? மக்கள் மேம்பாட்டைக் கருதும் நாம் சிறுத்தும், சிதறியும், சிந்தியும் கிடக்க – நீங்கள் சொல்லும் பண்ணையார்களின் பேராதிக்கம் தொடரத்தானே செய்யும் ?

மார்க்சீய பெரியாரிய அமைப்புகள் என்ன வேறுபாடு இருந்தாலும் ஒரு குறைந்த பட்ச செயல் திட்டத்தில் இணைந்து செயலாற்றலாமே ? மக்களைச் சுரண்டும் திமிங்கிலங்கள் மான, வெட்கம் பார்க்கிறார்களா ? கொள்கை பார்க்கிறார்களா ? யோசியுங்கள்.

*— சங்கமித்ரா. சென்னை.*

தலையங்கம் சரியான அடி. கருத்துப்பட விமரிசனம் நல்லதொரு விவாதத்தை முன் வைத்துள்ளது. இது போன்ற புதிய கருத்தை முன் வைப்பதே – விழிப்புணர்வு ஊட்டுவதே ஒவ்வொரு சிற்றிதழின் கடமை.

*— தி. மா. சரவணன். திருச்சி*

புதியதடம் இதழை வாசித்தேன். தான் ஏற்றுக் கொண்டுள்ள கொள்கையின் வழி நின்று இன்றைய அரசியல் நடப்புகளை, சமூக நிகழ்வுகளை, கட்டுரையாக கவிதையாகக் காட்டியுள்ளன – படைப்புகள்.

இந்த சமூகத்தில் நாமும் ஒரு அங்கமாக நின்றே அநீதிகளுக்கு எதிராகப் போராட மக்களை ஒன்றிணைக்க வேண்டும். இங்கு எல்லாம் குப்பை, மோசம் என்பது தனிமைப்பட்டுப் போகவே துணை புரியும்.

பல படைப்புகளில் இத்தகைய குரலே மேலோங்கி ஒலிக்கிறது. குறிப்பாக, போராட்டங்கள் பற்றிய ஒட்டு மொத்த கிண்டலடிப்பு. காதல் பற்றிய டானியலின் கட்டுரையும், கருத்துப்பட விமர்சனம் குறித்த ' நசிம் ' மின் கட்டுரையும் சிறப்பக இருந்தது. அட்டைப்படம் ரொம்பவே பிடித்திருந்தது.( முன்பு இதே படத்தைப்பார்த்ததாக ஞாபகம். மறு பிரசுரமா ? )



— டு. முருகேச பாண்டியன்.

படிப்பகம்

www.padippakam.com

புதியதடம் 5—வது இதழ் கிடைத்தது. தலையங்கம், கடிதங்கள் ஏதோ சடங்கு போலன்றி விஷயங்களைத் தெள்ளத் தெளிவாக சமூக அக்கறை கொண்டு விளக்குகின்றன. *குமரன் தாஸ்* அவர்களின் '*திரிபுவாதப்போராட்டங்களுள் ஒளிந்திருக்கும் இந்துத்துவம்*' கட்டுரை பார்ப்பனியத்தின் கூறுகள் பலவடிவங்களில் பல்வேறு வழிகளில் நம்மை வந்து தாக்கி சிறிது சிறிதாக அழித்து வருகிறது. என்பதை உணர முடிந்தது. காதல் சில குறிப்புகள் – விவாதம், கருத்துப்பட விமர்சனம் எல்லாம் சிந்திக்கத் தூண்டும் விதமாகவும், இன்றைய சிற்றிதழ் உலகின் கீழான போக்குக்கு எதிரான, நேர்மையான, தீவிரமான சிந்தனைப் போக்கு வளர வாசல்கள் திறந்து விட்டிருக்கிறது.

— *கே. புஷ்பராஜ்.*
*(கேப்பியார்) களியக்காவிளை*

---

***கட்டுரை*** — ***நசீம்***

## *பாலியல் சிக்கல்கள் :*

## *படுக்கையறையில் நுழையும் பன்னாட்டு கம்பெனிகள்.*

முந்தைய கால நாட்களில் கிராமங்கள் சூழ்ந்த சிறு நகரங்களில் நடைபெறும் வாரச் சந்தைகளின் ஏதேனும் ஒரு மூலையில் கரகரத்த குரலில் ஆண்களின் 'ஆண்மை' குறைவு பற்றிய எச்சரிக்கைகளும், நீர்த்துப்போகும் இந்திரியத்தை கெட்டிப்படுத்தும் ஜாலவித்தை வேர்களும், லேகியங்களும் கூவிக் கூவி விற்கப்பட்டதை நீங்களும் பார்த்திருக்கலாம்.

இப்போதும் கூட சிற்றூர்களின் மாலை மயங்கிய பொழுதுகளில், காடா விளக்குகளின் அரைகுறை வெளிச்சத்தில், ஒலி நாடாவில் பதிவு செய்த கரகரப்புக்குரல், ரகசிய நோய்கள் பற்றிக் கூறி நிவாரணம் தரும் சூரணம் அல்லது லேகியம் விற்றுத் தீர்வதற்குள் வாங்கிச் செல்லும்படி எச்சரிப்பதையும் பார்த்திருப்பீர்கள்.

உதிரித் தொழிலாளிகளும் வசதியற்றவர்களும் அவர்களைச் சுற்றி நின்று அக்கம் பக்கம் பார்த்து இழந்த சக்தியை திரும்பத் தரும் 'அற்புதத்தை' நம்பிக்கையுடன் வாங்கிச் செல்வர்.

உயர்வர்க்கத்தவர் ரோட்டோர லேகியங்களைத் தேடுவதில்லை. அதற்காக பாலியல் தொடர்பான பலகீனங்களோ அதனை ஒட்டிய மன உளைச்சலோ இல்லாதவர்கள் அவர்கள் என்று அர்த்தமில்லை. ஒப்பிட்டு ரீதியாகப் பார்த்தால் நடுத்தர மற்றும் உயர் வர்க்கத்தவரே இதுபோல் பலகீனங்கள் மற்றும் மன



படிப்பகம்

www.padippakam.com
உளைச்சல்களுக்கு அதிகமாக ஆளாகின்றனர். ஏனென்றால் நடுத்தர மற்றும் உயர்வர்க்க இளைஞர்கள் ஒரு குடும்பத்தை எவ்வாறு நகர்த்திச் செல்ல வேண்டும் என்பதில் இன்று சில முடிவுகளுக்கு வந்துள்ளார்கள்.

இன்றைய நுகர்பொருள் வெறி மிகுந்த நாட்களில் தனது லட்சிய குடும்ப முறையை நகர்த்திச் செல்ல பணம் குவிப்பில் முழு மூச்சாக அவர்கள் ஈடுபட வேண்டியிருக்கிறது.

புது மாதிரியான வீடு, மோட்டார் வாகனம், T.V., போன், சோபா, குழந்தைகள் படிக்க நர்சரி, கான்வென்ட், வேலைக்காரர்கள் இது தவிர நகைகளும், பட்டுச்சேலைகளும் அணிந்து அலங்கார பொம்மையாக விளங்கும் மனைவி என்று குடும்பம் நடத்த தொழில் அல்லது வேலையில் முழு முச்சாக ஈடுபடும்போது மனைவி குழந்தைகளுடன் தனது நேரத்தைச் செலவிடுவது குறைந்து விடுகிறது.

மகிழ்ச்சியான வாழ்க்கைக்காக குவிக்கத்துவங்கும் பணம் அதற்கே உரித்தான எதிர்வினையையும் ஆற்றத் துவங்குகிறது. படிக்கச்செல்லும் குழந்தைகள் தகப்பனது பண பலத்தால் கூடாத பழக்கங்களுக்கு அடிமையாகிறார்கள்.

உழைப்பில் இருந்து விடுபட்டு அழகுப் பதுமையாக வீட்டில் வைக்கப்படும் மனைவி வீட்டு வேலைகளுக்கும் வேலைக்காரியை வைத்துக் கொள்ளும்போது சும்மா இருக்கும் நேரத்தை T. V. பார்ப்பதில் செலவிட நேரிடுகிறது. அதன் காரணமாக தன்னில், தனது உடல் மற்றும் உடை அழகுகளில் கவனம் குவிக்கும் போக்கு அதிகப்படுகிறது.

ஆனால் யதார்த்தத்தில் மனைவியின் அழகை தனக்கு உடைமையானது; தனது கௌரவத்திற்கு தேவையானது என்று கணவன் கருதினாலும் அழகை பாராட்டவோ, வர்ணிக்கவோ அதற்கு ஏற்ப தன்னை தயார்படுத்திக் கொள்ளவோ செய்யாமல் பணம் குவிப்பில் முழு மூச்சாக ஈடுபடும்போது முரண்பாடு தோன்றுகிறது.

மனைவியின் அழகுபடுத்துதலுக்கு ஆதாரமான கணவனது பணக்குவிப்பே மறுபுறம் அவனை எதிராகக் கொண்டு வந்து நிறுத்துகிறது. கணவனது நேரமின்மை என்பதுடன் 'தான் அழகற்று இருந்தாலும் தனது மனைவி அழகானவளாக இருக்க வேண்டும்' என்ற ஆணாதிக்க மனோபாவமும் இங்கு செயற்படுகிறது.

இந்நிலையில் கணவனின் பொருளாதார பராமரிப்பை ஒருபுறமும் தனக்கு நிகரான உடல் அழகை, தனது அழகை ஆராதிக்கும் பண்பு கொண்ட ஆணை மறுபுறமும் நாட மனைவி துவங்கும்போது முரண்பாடு முற்றுகிறது.


படிப்பகம்

www.padippakam.com

தொழில் மற்றும் அது சார்ந்த நெருக்கடியில் சிக்கி மன உளைச்சலுக்குள்ளாகும் ஆண் பாலியல் உறவில் எந்திரத்தன்மையுடனும், தனது சுகத்தை மட்டுமே கவனத்தில் கொண்டு ஆணாதிக்கப்போக்கில் இயங்கும்போது அழகியல் ஆராதனையில் விருப்பம் கொண்ட பெண்ணின் சிந்தனையுடன் முரண்பட நேர்கிறது.

இத்தகைய முரணில் சிக்கிய பெண் பிற அழகிய ஆணுடன் தன் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள முயலும் போது கணவன்களது கண்காணிப்பு சமூகமாக இது இருப்பதால் எளிதில் அவனது பார்வைக்கு மனைவியின் ' மீறல் ' தெரிந்து முரண்பாடு முற்றுகிறது.

வர்க்கத்தன்மைக்கேற்ப சில ஆண்கள் (கவரிமான் !) மனைவியைக் கொலை செய்கின்றனர். பலர் மருத்துவர்களை நாடி தங்களது ஆண்மை பற்றிய பரிசோதனைகளில் ஈடுபடுகின்றனர்.

ஆனால் இன்று இவ்வாறு மருத்துவர்களை நாடுவதும் கூடக் குறைக்கப்படுகிறது. உயர்வர்க்க, நடுத்தர வர்க்கத்தினரின் எந்திரமயமான வாழ்க்கை முறைக் கேற்ப கணவன்கள் தங்களது ஆணாதிக்கத்தை தொடர்ந்து படுக்கையிலும் காத்துக் கொள்ள பன்னாட்டு, உள்நாட்டு கூட்டுத் தயாரிப்பு வீரிய மாத்திரைகள், ஸ்பிரே போன்றவற்றை T.V. தினசரி, மாத வார இதழ்களின் விளம்பரங்களில் பார்த்து நேரிடையாக வாங்கிப் பயன்படுத்துகின்றனர்.

" வயாக்கரா " பற்றி கடந்த சில மாதங்களுக்கு முன் பத்திரிக்கை உலகம் எழுதிக் குவித்ததை ஞாபகப்படுத்திப் பாருங்கள்.

இத்தகைய மாத்திரைகளின் வருகையால் பாலியல் தொடர்பான இரகசிய பலகீனங்களுக்கு வைத்தியம் செய்து கொள்ளை இலாபம் அடித்து வந்த மருத்துவர்கள் (M.B.B.S.) வயிற்றில் பயம் புளி கரைக்கத் துவங்கியவுடன் தாங்கள் இழந்து வரும் ( வருமானத் ) தெம்பைத் திரும்பப் பெற மீடியாக்களின் துணையை நாடத் துவங்கியுள்ளனர்.

பாலியல் தொடர்பான சிக்கல்களைத் தீர்ப்பதில் தாங்கள் செய்த சாதனைகளைப் பட்டியலிட்டு வார இதழ்களில் எழுதிக் குவித்து வருகின்றனர்.

T.V. யில் ஆலோசனை நேரங்களில் இலவசமாக விளம்பரம் தேடிக் கொள்கின்றனர். இவர்களைக் கொண்டு மீடியாக்களும் பணத்தை குவித்து வருகின்றன. இவர்களைப் பொறுத்தவரை மக்களது ஒவ்வொரு பிரச்சனையும் பணம் குவிக்கும் வழியாக மாற்றப்படுகிறது.

பன்னாட்டுக் கம்பெனிகள், கூட்டுக் கம்பெனிகள் மாத்திரை முதல் ஸ்பிரே வரை தயாரித்து சுதேசி லேகியத்தையும் சூரணத்தையும் லேகியத்தையும் விரட்டியடிக்கும்போது நாட்டு மருந்து விற்கும் சுதேசிகள் சும்ம இருந்து விடுவதில்லை.



படிப்பகம்

வெளிநாட்டுப் பொருட்களுக்கு (சோப்பு, பவுடர், டார்ச்-லைட், துணி வகைகள், குடை) மவுசு அதிகரித்தபோது வெளிநாட்டு டப்பாக்களில், லேபிள்களில் தங்களது போலி (?!) பொருட்களை அடைத்து விற்றதைப் போலவே ஸ்பிரே, மாத்திரை என்ற பெயரில் ஏதேனும் மிட்டாய்களையும், தைலங்களையும் இவர்கள் விற்றுத் தீர்க்கின்றனர்.

இதனை சமீபத்திய சில உதாரணங்கள் கொண்டு அறிந்து கொள்ளலாம் :–

1. கள்ளச்சாராயம் தயாரிப்பாளர்கள் வெளிநாட்டு மது புட்டிகளில் அதனை அடைத்து விற்க முயன்று பிடிபட்ட தினசரி செய்தி.
2. வயக்கரா, சில நாடுகளில் மட்டுமே விற்க அனுமதிக்கப் பட்ட நிலையில் உலகின் பல நாடுகளிலும் கிடைக்கிறது என்று தினசரிகளில் வந்த புள்ளி விபரங்கள்.
3. சுற்றுலாத் தலங்களில் ஐயப்ப சுவாமி சீசனில் (கார்த்திகை, மார்கழி) எழுச்சியூட்டும் மாத்திரைகள் என்ற பெயரில் விற்கப்படும் "மார்வாடி" தயாரிப்புகள், வெளிநாட்டு சென்ட் என்ற பெயரில் விற்கப்படும் தைலங்கள், பவுடர் என்ற பெயரில் விற்கப்படும் தைலம் கலந்த மாவு வகைகள் போன்றவற்றை குறிப்பிடலாம்.

மாலை அணிந்து விரதம் இருந்துவரும் ஐயப்ப சுவாமிகள் எழுச்சியூட்டும் மாத்திரைகளை உடனே தின்று பார்த்து பயன் கிடைக்காமல் "தூ. நிலக்கடலைப்பருப்பு" என்று திருப்பிக் கொடுத்து சண்டை போட்டது இக் கட்டுரைக்குத் தொடர்பில்லாத சுவையான செய்திகள்.

நாம் கூற வந்தது பன்னாட்டு, கூட்டுத்தயாரிப்புகளால் பணக்கார வெளி நாடுகளும் அவர்களது உள் நாட்டுத் தரகர்களும் கோடி கோடியாகப் பணம் குவிக்கும்போது அதன் பெயரில் உலகின் கடைக் கோடியில் இருக்கும் சிறு திருடர்களும் சில நூறுகளாவது சம்பாதித்து விடுவதை யாராலும் தடுத்துவிட முடிவதில்லை என்பதையே.

## சித்தர்களின் இராஜ வைத்தியம் :

பாலியல் வைத்தியம் என்பது தமிழகத்திற்கு புதியதில்லை. வெகு காலத்திற்கு முன்பே தமிழகத்தில் சித்தர்கள், மன்னர்கள் மற்றும் பெரிய மனிதர்! களின் பாலியல் சித்து விளையாட்டிற்கு அதாவது காமக்களியாட்டத்திற்கு பேருதவி புரிந்திருக்கிறார்கள்.

மன்னராட்சி காலத்தில் நிலம் துவங்கி கலை, தொழில், வாணிபம் என அனைத்தும் மன்னர்களின் நலனுக்குள் முடக்கப்பட்டு மக்களின் நலன் புறந்தள்ளப்பட்டதைப்போலவே,



படிப்பகம்

வாசித்த/கண்ட நுகர்வோர் இதற்கு மாற்றான சூழலில் மன ஊனப்படுத்தப்படுகின்றனர்.

www.padippakam.com

ஓர் தொழில் வளர்ச்சி அடைந்த நாட்டில் ஆணுக்கு நிகராக பெண் அனைத்துத் துறையிலும் வேலை செய்யும்போது உடலுறுப்புக்கள் ஓரளவு சமத்துவத்தன்மையும் சிந்தனையில் மாறுதல்களும் ஏற்படுகின்றன.

இதனை நமது தமிழகச் சூழலில் பொருத்துவதானால் விவசாயக் கூலிகளாக உள்ள ஆண்/பெண் இரு பாலரிடமுமான உருவ வேறுபாடு அதிக பட்சமானதாக இல்லை. அதாவது மேட்டுக்குடியினர் அழகு என்று கருதும் மெழுகு பொம்மை போன்ற உருவம், நிறம், இடுப்பு, கை, கால்கள் மற்றும் பிற உறுப்புகள் போல இல்லை.

சரியாகச் சொல்வதானால் மாதிரி ஆண்/பெண் பற்றி மீடியாக்கள் விளம்பரப்படுத்தும் உருவங்களுடன் எங்களது உழைக்கும் மக்கள் முரண்படுகின்றனர்.

தமிழ்ப்பண்பாடு கற்பித்த நீண்ட தலைமுடி, சேலை, பொட்டு வைத்தல், பூ முடித்தல், அழகு படுத்தல் போன்ற வெளிச் செயல்பாடுகள் தான் ஆண் பெண் வேறுபாட்டை பளிச்செனக் காட்டுகிறது. உழைப்பு உருவ வேறுபாட்டை குறைத்து விடுகிறது.

இந்திய ஆணாதிக்கம் பெண்ணை பெண் குறியாகப் பார்க்கிறது. ஆணாதிக்கத் தமிழ்ச் சினிமா பெண் குறிக்கு நிகராக காட்சிப்படுத்தும் "தொப்புள்" அடித்தட்டு உழைக்கும் பெண்கள் மத்தியில் தனது செல்வாக்கை இழக்கிறது. அது தன் இயல்பான தன்மையை மட்டுமே பெற்றிருக்கிறது. இது ஒவ்வொரு உறுப்பும், நிறம், மயிர் என அனைத்திலும் ஆணாதிக்க மீடியாக்கள் காட்சிப்படுத்தும் பெண்/ஆண் அங்கங்களுக்கு எதிராக இயல்பான தன்மையுடன் இருப்பது பாலியல் உறவில் போலித்தனங்கள் செல்வாக்குச் செலுத்த தடையாக இருக்கிறது.

இந்த சாதகமான அம்சமே பாலியல் சிக்கல்கள் இல்லாத, அதாவது ஆணாதிக்கம் அற்ற ஆண்/ பெண் சமத்துவ அடிப்படையிலான விஞ்ஞான பூர்வமான பாலியல் உறவிற்கு அடிப்படைக் கூறுகளாகும்.

இந்த அடிப்படைக் கூறுகளில் இருந்து "அழகு" பற்றிய கற்பிதத்தை பரிசீலிப்பதே இன்றைய தேவை.

இந்தியாவில் இந்துத்துவம் ஒவ்வொரு மனிதனின் அன்றாட செயல்பாடுகளையும் வரையறுத்துள்ளது. சாதி அடிப்படையில் பிரித்து அவனது உணவு, உடை, வாழ்விடம் என அனைத்தையும் வரையறுத்துள்ளது.

மனிதனின் பாலியல் தேவையையும் மதத்திற்குள் உட்படுத்தி முறைப்படுத்தியுள்ளனர். இந்த ஆணாதிக்க நோக்கிலான முறைப்படுத்தலை நியாயப்படுத்துவதற்காக பல்வேறு கற்பிதங்களை உருவாக்கியுள்ளனர்.



படிப்பகம்

இந்தக் கற்பிதங்கள் அனைத்தும் பெண்களை பாலியல் ரசனையற்றவர்களாகவும் பாலியலில் சுதந்திரமாக தேர்வு செய்ய இயலாதவர்களாகவும் கற்பிக்கின்றன. அல்லது தேர்வு செய்ய முன் வரும் பெண்களை " கற்றவர் " என்று பறை சாற்றுகிறது.

www.padippakam.com

இன்னும் மிகக் கொடிய விசயம். பெண்களை பெரும்பான்மையாக ஆணாதிக்க அழகியல் கோட்பாட்டை ஏற்று செயல்படுபவர்களாக தகவமைத்து வைத்திருப்பதுதான்.

அதாவது ஒருபுறம் இந்துத்துவ பிற்போக்கு கற்பிதங்களும் மறுபுறம் பன்னாட்டு கம்பெனிகளுக்குச் சாதகமான நவீன ஆணாதிக்க அழகியல் கோட்பாடும் என்ற இரு வேறு நிலைகள் நிலவுகின்றன.

இதற்கு மாற்றாக ஒடுக்கப்பட்டோர் நலன் நோக்கில் இன்னொரு கற்பித உருவாக்கம் தேவைப்படுகிறது. அந்த வகையில் பெண்ணிய நோக்கில் இருந்து " புதிய SEX " பற்றிய கற்பிதம் உருவாக்கப்பட வேண்டும்.

அதற்கு முதல் கட்டமாக நிலவும் அழகியல் கோட்பாடுகளை கேள்விக்குள்ளாக்க வேண்டும். ஏனென்றால் நம்மிடம் உருவாக்கப்படுகின்ற நம்மைப் பற்றிய தாழ்வு மனப்பான்மைதான், குற்ற உணர்வுகள்தான், நாம் திருந்த வேண்டியவர்கள், மாற வேண்டியவர்கள் என்ற உணர்வை ஏற்படுத்தி பன்னாட்டுக் கம்பெனிகளின் பொருட்களை வாங்கி உபயோகிக்கும் வேட்டைக்காடாக நம் உடலையே மாற்றி விடுகிறது.

நமது அக்குள் ( கம்புக்கூடு ) களை மோர்ந்து பார்த்து முகம் சுழிக்கும் பன்னாட்டுக் கம்பெனிகள் நமது தலைப் பொடுகு, பேன்களுக்காக படும் கவலைகளின் பின்னால், பல கோடி ருபாய் கனவு ஒளிந்திருப்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டியுள்ளது.

இவற்றிற்கெல்லாம் எதிராக நமது " சுயத்தை ", நிறத்தை, வியர்வை மணத்தை, பித்த வெடிப்பை, நமது வாழ்வின் வளத்தை எல்லாம் இவர்கள் பறித்துக் கொண்டதன் அடையாளமான வறண்ட மயிரையும், கருப்பு நிறத்தையும் போராட்டத்தின் குறியீடுகளாக உயர்த்திக் கற்பிப்போம்.

*வாசகர்களின் படைப்புகள் வரவேற்கப்படுகின்றன.*

**ரூ. 50/- நன்கொடை சந்தா செலுத்துபவர்களுக்கு இதழ் தொடர்ந்து கிடைக்கும்.**

**நூல் விமர்சனம் பகுதிக்கு 1 பிரதி அனுப்ப வேண்டும்.**

**தொடர்புக்கு :**

**மேகவண்ணன். " புதியதடம் "**

*28, B, லெட்சுமண தீர்த்தம் தெரு, இராமேஸ்வரம் – 623 526*

படிப்பகம்

www.padippakam.com

# வரப்பெற்றோம்

**தமிழின விடியல்,** 6,காளிகோயில் தெரு, தமிழூர், புதுச்சேரி-9.

புன்னகை (கவிதை இதழ்), 68,பொள்ளாச்சி சாலை, ஆனைமலை-642 104.

**தமிழ் கீதம்,** பாரதிதாசன் நகர், வால்பாறை - 642 127.

**ஆத்மா,** M.P.வெங்கட்ராஜ், 52,காந்திபுரம்-3.

**சிந்தனையாளன்,** 19,முருகப்பா தெரு(மாடி), சேப்பாக்கம், சென்னை-5.

**சங்கமம்,** 1-A, பள்ளிவாசல் தெரு, இராமேஸ்வரம்-623 526.

மணித்துளி, No1, நேதாஜி தெரு, ஐயப்பா நகர், சபரி மில்ஸ் எதிர்புறம், கே.கே.நகர்,.P.O. திருச்சி-620 021.

**வேர்கள்,** அரிமாவளவன், 10ஆ, வாத்துக்காரத் தெரு, உறையூர், திருச்சி-620 003.

**கனவு,** சுப்ரபாரதிமணியன், 8/707-C; பாண்டியன் நகர், திருப்பூர்-641 602.

**கதவு,** 5,36-48, பாரதிநகர், மின் வாரிய குடியிருப்புகள் (கிழக்கு), அருப்புக்கோட்டை-626 101.

**சிநேகம்,** தமிழ்ச்செல்வன், கடமலைக்குன்று, மேக்காமண்டபம்-629 166 குமரிமாவட்டம்.

**யாதும் ஊரே,** 15, ஆனந்தன் தெரு, திருவள்ளுவர் நகர், பம்மல், சென்னை-600 075.

**மணிமுத்தாறு,** இரா.ரெங்கப்பிள்ளை, ஜெமினி படமனை, 730/5, தொய்வண்டி சந்திப்பு சாலை, திருமுதுகுன்றம்-606 001. விருத்தாசலம்.

**மன்னர் மலர்,** 10/2, நால்வர் நகர், பாரதியார் பல்கலைகழகம் அஞ்சல், கோவை-641 046.

**செம்பருத்தி,** PETI SURAT 10915, PEJABAT POS BESAR, 50728, KUALA LUMBUR, MALAYSIA.

**சக்தி,** BOKS 99, OPPSAL, 0619, OSLO 6, NORWAY.

**காலம்,** SEELVAM, 145, GLENDEWER CIRCUIT, SCARBOURGH, MIT-227-CANADA.

**இடறல்** (சினிமா விமர்சன காலாண்டிதழ்), V.P.சிவக்குமார், 2, நேருதெரு, தென்பழனி நகர், கொளத்தூர், சென்னை-99.

**உயிர்நிழல்,** 27, RUE JEAN MOULIN, 92400, COURBOVOIE, FRANCE.

**உன் முகம்,** MANO RANJAN, 11-A/36. II ND FLOOR, W.E.A. KAROL BAGH, NEW DELHI-110 005.

படிப்பகம்